**செய்தி வெளியீடு எண் : 456** **நாள்: 23.03.2022**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சுதந்திரப் போராட்டத் தியாகிகள் மற்றும் தமிழ் அறிஞர்கள் ஆகியோர்களின் புகழினைப் போற்றி பாராட்டுகின்ற வகையில், அன்னார்களுக்கு திருவுருவச் சிலைகள், மணிமண்டபம் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்கள். அதன்படி சென்னை மாவட்டத்தில் அறிவித்துள்ள அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் இன்று (23.03.2022) ஆய்வு செய்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பினை செயல்படுத்துகின்ற வகையில், சென்னை கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் அமைக்கப்படவுள்ள அயோத்தி தாச பண்டிதர் அவர்களுக்கு மணிமண்டபம், 'கப்பலோட்டியத் தமிழன்' வ.உ.சிதம்பரனார் அவர்களுக்கு மார்பளவுச் சிலை அமைக்கப்படவுள்ள இடங்கள் மற்றும் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் தனது செய்தித் துறை மானியக் கோரிக்கையின்போது அறிவித்துள்ள காந்தி மண்டப வளாகத்தில் வீரபாண்டிய கட்டபொம்மன், மருது சகோதரர்கள், முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன் ஆகியோருக்கு திருவுருவச் சிலைகள் நிறுவப்படவுள்ள இடங்களை மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும், சென்னை அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ.அப்துல் கலாம் அவர்களுக்கு திருவுருவச் சிலை அமைக்கப்படவுள்ள இடத்தையும், சென்னை இராணிமேரிக் கல்லூரி வளாகத்தில் வங்கக்கவி இரவீந்திரநாத் தாகூர் அவர்களுக்கு திருவுருவச் சிலை அமைக்கப்படவுள்ள இடத்தையும் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பணிகள் மேற்கொள்ளப்படவுள்ள இடங்களை உரிய அளவீடுகள் மேற்கொண்டு, திட்ட மதிப்பீடுகளையும், வடிவமைப்புகளையும் உடனடியாகத் தயார் செய்து பணிகளை விரைந்து நிறைவேற்றிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வருவாய் மற்றும்

பொதுப்பணித் துறை அலுவலர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு.மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., அவர்கள், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப., அவர்கள், அண்ணா பல்கலைக்கழக துணைவேந்தர் திரு.ஆர்.வேல்ராஜ், அண்ணா பல்கலைக் கழக பதிவாளர் (பொறுப்பு), டாக்டர் ஜி.ரவிக்குமார், கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) திரு.ச.பாண்டியன், இராணிமேரிக் கல்லூரி முதல்வர் டாக்டர் திருமதி.பி.உமாமகேஷ்வரி, தென் சென்னை வருவாய் கோட்டாட்சியர் திருமதி.ஜெ.யோகஜோதி, பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் திரு.எஸ்.லால்பகதூர், மயிலாப்பூர் வட்டாட்சியர் திருமதி.ஆர்.நந்தினி மற்றும் வருவாய்த் துறை, பொதுப்பணித் துறை அலுவலர்கள் உடன் இருந்தனர்.

……

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in